பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ சிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஐப்பசி 13௳ (30—10—67) திங்கள் வெளியூர் : ஐப்பசி 14௳ (31—10—67) செவ்வாய் [இதழ் : 114

நாட்டு மக்களைச் சுட்டுப் பொசுக்கவா பட்டாளம்?

ஈட்டி முனையைக் காட்டினாலும் ஏற்கமாட்டோம் இந்தியை!

வடவர் வெறித்தனம் -- அண்ணா பதிலடி!

"பட்டாளத்தை நாம் ஏன் வைத்திருக்கிறோம்? பணம் இருப்பதாலா? அல்ல! நாட்டைப் பாதுகாக்கத்தான் வைத்தி[illegible]றோம். நாட்டைப் பாதுகாக்கப் பயிற்சி பெற்றவர்கள் இருக்க வேண்டுமே என்ப[illegible]ாகத்தான் பட்டாளம் வைத்திருக்கிறோம். அந்நியர், நாட்டில் நுழையாமல் நாட்டைப் பாதுகாப்பதற்காகத்தான் பயிற்சி பெற்ற பட்டாளத்தை வைத்திருக்கிறோம். ஊருக்குள் நுழைந்து இந்தி படிக்காதவர்களைச் சுட்டுப் பொசுக்க அல்ல.

"நான் படித்த ஏடுகளில் பட்டாளத்துக்கு வேலை இருப்பதாகப் படித்திருக்கிறேன். ஆனால் எந்த ஒரு நாட்டிலும் பட்டாளம் அந்த நாட்டின் ஒரு பகுதி மக்கள், மொழியை எதிர்க்கிறார்கள் என்பதற்காக—அவர்களைச் சுட்டுத் தள்ளுவதற்காக இருந்ததாக நான் இதுவரை படித்ததில்லை.

"ஆனால் அப்படிச் சுட்டுத்தள்ளத்தான் பட்டாளம் இருக்கிறது என்றால் அந்தப் பட்டாளமும் நானும் ஒன்றாக இருக்க முடியாது.

"ஒன்று, நாங்கள் அந்தப் பட்டாளம் இல்லாத இடத்தில் இருக்க வேண்டும்; அல்லது அந்தப் பீரங்கிக்கு நாம் இரையாக வேண்டும்.

"ஆனால் தமிழ்நாட்டில் உள்ள மக்கள் எல்லோரையும் பீரங்கியால் சுட்டுத் தள்ளிவிட்டால் பிறகு இந்தியைப் படிப்பவர் யார்? பீரங்கிகளை வரிசையாக நட்டு அவற்றிற்குச் சொல்லிக் கொடுப்பார்களா?

"ஈட்டி முனையைக் காட்டினாலும், அதனால் அதன் முனை முறியுமே தவிர அதற்கு வெற்றி ஏற்படப்போவதில்லை—எங்கள் உறுதி தளரப்போவதில்லை.

"எனவே, சேத் கோவிந்த தாஸ் போன்ற இந்தி வெறியர்கள் எண்ணம் எவ்வளவு தவறானது—எவ்வளவு கேலிக்குரியது என்பதை இந்த நவம்பர் 7-ம் நாள் இடைத் தேர்தலில் மாறனைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் நாம் காட்ட வேண்டும்"

—என்று அறிஞர் அண்ணா அவர்கள், மாணவர்கள் நடத்திய சனநாயகப் பாதுகாப்பு மாநாட்டில் வீரமுழக்கமிட்டார்கள்.

மாநாட்டு நிகழ்ச்சி

இந்த மாநாடு, தேனாம்பேட்டை ஆபட்ஸ்பரி மாளிகையில் சட்டக் கல்லூரி மாணவர் துரை. முருகன் பி.ஏ. தலைமையில் நடைபெற்றது.

பச்சையப்பன் கல்லூரி மாணவர் ம. செல்வராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

துரை கலியரத்தினம் மாநாட்டைத் துவக்கிவைத்தார்.

மாநாட்டில் அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து, சாதிக் பாட்சா, முத்துசாமி, சட்டப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார், கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., அனைத்துக் கல்லூரி பேரவைக் தலைவர் இரா. சனார்த்தனம், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ. சீனிவாசன், எல். கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் க. இராசாராம், எஸ். எஸ். மாரிசாமி, எஸ். டி. சோமசுந்தரம், கோ. விசுவநாதன் ஆகியோர் பேசினர்.

அண்ணா அவர்களு அரிய கருத்துரையாற்றினார்கள்.

தேர்தல் நிதி

மாநாட்டில் கட்டணம் செலுத்தி ஆயிரக்கணக்கானவர்கள் குழுமியிருந்தனர்.

செலவு போக மிச்சப்பட்ட தொகையான 4444 ரூபாயை முரசொலி செல்வம் அறிஞர் அண்ணா அவர்களிடம் தென் சென்னை இடைத் தேர்தல் நிதியாக அளித்தார்.

ஊர்வலம்

மாநாட்டையொட்டி, மாபெரும் ஊர்வலம் நேப்பியர் பூங்காவிலிருந்து புறப்பட்டு ஆபட்ஸ்பரிக்கு வந்துசேர்ந்தது.

ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவ — மாணவியர் கலந்துகொண்டு இந்தி எதிர்ப்பு முழக்கங்களை முழங்கிக்கொண்டு வந்தனர்.

வெளியூர்களிலிருந்தும் ஏராளமான மாணவர்கள் வந்து கலந்துகொண்டனர்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடைத் தேர்தல்

சென்னை, அக். 30—

"இது இடைத் தேர்தல் மட்டுமல்ல. 'தமிழகம் இந்தித் திணிப்பைத் தொடர்ந்து எதிர்த்து வருகிறது' என்பதைக் காட்டும் வரலாற்று முக்கியத்துவமிக்க தேர்தல் ஆகும்!

"இதில் மாணவர்கள் முழு முயற்சியுடன் ஈடுபட்டு இருப்பதற்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

---அறிஞர் அண்ணா

இந்தியா ஒரே நாடாக இருக்க அண்ணா கூறும் யோசனை!

சென்னை, அக். 30—

"தேசீயப் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், போக்குவரத்து ஆகிய மூன்று துறைகள் தவிர்த்து மற்ற அனைத்து அதிகாரங்களையும் மத்திய அரசு மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும்; அதற்கான முறையில் அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும்; இம்மாறுதல் ஏற்படப் பாடுபட வேண்டும்.

"இந்த மாறுதல் நிகழ மாணவர்களாகிய நீங்கள் பாடுபடப் போகிறீர்கள்! மாநிலங்கள் பாடுபடப் போகின்றன! அதற்கான காலம் வந்துகொண்டிருக்கிறது!"

என்று அறிஞர் அண்ணா அவர்கள், மாணவர் சனநாயகப் பாதுகாப்பு மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்கள். அவர் மேலும் இதுபற்றிக் கூறியதாவது :—

"இந்தியா ஒரே நாடாக ஆக வேண்டும்; 'ஆக வேண்டாம்' என்று நான் கூறவில்லை.

"'இந்தியா ஒரே நாடாக ஆவதற்கு உதவிசெய்யுங்கள்' என்று என்னைக் கேட்டால், அதற்கு நான் உதவிசெய்யவும் தயாராக இருக்கிறேன்.

"இந்தியா ஒன்றுபட்டதாக இருக்க வேண்டுமானால், 'தமிழ்நாடு இந்தியை அடியோடு எதிர்க்கிறது' என்ற உண்மையை வடக்கேயுள்ளவர்கள் புரிந்துகொண்டு செயலாற்ற வேண்டும்,'

காதால் கேட்டது!

"ஜபல்பூர் மாநாட்டில் கலந்துகொண்ட இராஜஸ்தான் முதலமைச்சர் சுகாதியாவுக்கு மாரடைப்பு வந்துவிட்டதாமே?"

"ஆமாம்! திடீர் அதிர்ச்சியினால்தான் அந்த வியாதி வரும்! அங்கே நடந்த நிகழ்ச்சிகள்தான் அதற்குக் காரணமோ, என்னவோ?"

காங்கிரசு கரைகிறது!

அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டியின் மொத்தப் பிரதிநிதிகள் 718 பேர்!

அவர்களில், ஜபல்பூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தோர் எண்ணிக்கை, பாதிக்கும் குறைவு! அதாவது, 290 பேர் மட்டுமே!

பொதுத் தேர்தல் முடிந்து பொது வேலைகள் ஏதும் இல்லாத நிலையிலும்—பிரதிநிதிகள் பெருவாரியாக வராதது, 'பொதுத் தேர்தல்களில் காங்கிரசு பெற்றுள்ள சரிவே காரணம்' என்று கூறப்படுகிறது.

ஜபல்பூரில்....!

★ 'விவாத நேரம் நீடிக்கப்பட வேண்டும்' என்று கோரிய பிரதிநிதிகளைப் பார்த்து கோபம் கொண்ட காமராசர், ஆங்கிலத்தில் பேசியிருக்கிறார்!

★ மொரார்ஜி தேசாய் பேசிய பிறகு, 'காலைப் பகுதிக் கூட்டமே முடிந்துவிட்டது' என பல பிரதிநிதிகள், கலைந்து செல்ல முற்பட்டிருக்கின்றனர்!

★ இங்கிலாந்து அமெரிக்கா, இரஷ்யா, அரபுக் குடியரசு, போலந்து, ஜப்பான், மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளின் இந்தியத் தூதுவரக அதிகாரிகள் நிகழ்ச்சிகளைக் காண வந்திருந்தனர்!

★ "நாம், நமது நிர்வாகம் நடைபெறாத ஒரு மாநிலத்தில் கூடியிருக்கிறோம்" என்ற உணர்வினை, கூட்டத்திற்கு வந்திருந்த ஒவ்வொரு காங்கிரசுக்காரரும் உணர்ந்திருந்தனர்!

காங்கிரசுத் தலைவர் தேர்தல்

மூலவர்கள் நிலை!

★ "பதவியில் நீடித்திருக்க விருப்பம்தான்; ஆனால், போட்டி இருக்கக்கூடாது" என்கிறார் இப்போதையக் காங்கிரசுத் தலைவர் காமராசர்!

★ "தலைவர் தேர்தலில் நான் எந்த வகையிலும் ஈடுபட மாட்டேன்" என, ஒதுங்கிப் போகும் போக்கினைக் கடைபிடிக்கிறார் மொரார்ஜி தேசாய்!

★ 'இவரா, அவரா?' என யார் பற்றியும் எந்தக் கருத்தினையும் சொல்லாமல், அமைதி கலந்த கவனிப்பைக் காட்டுகிறார், தலைமையமைச்சர் இந்திரா!

இந்த நிலையில், பனைந்து நாட்களுக்குத் தள்ளிவைக்கப்பட்டு டிசம்பர் 15-ம் நாளன்று அனைத்திந்தியக் காங்கிரசுக்கான தலைவர் தேர்தல் பற்றி முடிவு எடுக்கப்பட இருக்கிறது!

கவனித்தீர்களா?

ஜபல்பூரில் கூடிக் கலைந்தவர்கள், முடிக்காமலே பேசி முடித்த பிரச்சினைகள் ஏராளம்!

ஆனால், பேசாமலே நழுவியிருக்கும் ஒரு பிரச்சினை, மது விலக்கு!

"காந்தியடிகளின் 100-வது பிறந்த தின நினைவாக, நாடு, 1970—71-ல், உணவில் சுய தேவை நிறைவை எய்த வேண்டும்" என்று தீர்மானம் போட்டவர்கள், அவர் இறந்த இந்த இடைவெளிக் காலத்துக்குள், மதுவிலக்கு முழுமையாக அமுல் நடத்தப்படாதது குறித்துப் பேசவுமில்லை—தீர்மானம் போடவுமில்லை!

தமிழகத்தைப் பிரதிபலித்த நான்கு பேர்!

ஜபல்பூர் மாநாட்டில் காமராசர் மாநிலத்தின் சாதனை!

ஜபல்பூரில் நடைபெற்ற அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டிக் கூட்டத்திற்குத் தமிழகத்தின் பிரதிநிதிகளாகச் சென்றி

(4-ம் பக்கம் பார்க்க)

அரிசிக்கு உலை வைப்போம் நாம்!--

காமராசரோ திட்டத்துக்கு உலை வைக்கிறார்!

'நல்லாட்சி நிலைக்க நவ. 7-ல் வாக்களிப்பீர்!'-- பேராசிரியர் க. அன்பழகன் வேண்டுகோள்

" அமைச்சர்கள் கொண்டுள்ள இலட்சியங்கள் நிறைவேற கோட்டையில் உத்தரவுகள் போட்டால் மட்டும் போதாது; நம் அனைவரது ஒத்துழைப்பும் அவர்களுக்குத் தேவை.

" 'ரூபாய்க்குப் படி அரிசி என்பது, ஏதோ அண்ணா அவர்கள் எளிதில் ஓர் உத்தரவின் மூலம் செய்துவிட்ட காரியம்' என்று மட்டும் எவரும் எண்ணவேண்டாம்; 'புதிய வரிகளைப் போடாத நேரத்தில் இந்தத் திட்டத்தை அமுலாக்கினால், ரூ. 7--8 கோடி நட்டம் வரும்; அதை அரசால் தாங்க முடியுமா?' என்று அதிகாரிகள் கேட்டார்கள்; இதையெல்லாம் மீறித்தான் அண்ணா அவர்கள், இதைச் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டார்கள்! இதனால், 'ஏழைகளின் வயிறு நிரம்பிவிட்டது' என்று நான் சொல்லமாட்டேன்.

" காங்கிரசு ஆட்சியில், மக்கள் அரிசிக்காகப் பட்ட துன்பமெல்லாம் தெரியாததா? அந்தச் சிக்கலெல்லாம் பெரும் அளவுக்கு இப்போது தீர்ந்துவிடவில்லையா?

" ஏழைகளாக உள்ள மக்களுக்கு உதவ எண்ணியே கழக அரசு, மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பண்டமான அரிசியின் விலையை முதலில் குறைத்தது! இந்த ஆட்சியைவிட ஏழையருக்கு உதவும் ஆட்சி வேறு இருக்குமா?

" 'இந்த அரசை யாரும் மாற்றவோ கவிழ்க்கவோ இயலாது' என்பதைத் தெரிவிக்கும் நாள், நவ. 7; அந்நாளில் நடைபெறவிருக்கும் தென் சென்னை இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் முரசொலி மாறனை ஆதரித்துத் தென்சென்னை மக்கள் வாக்கு அளிக்க இருக்கிறார்கள்! வட சென்னைத் தொகுதியில் இருப்பவரேயானாலும் -- அங்குள்ளவர்கள், தங்களுக்குள்ள செல்வாக்கினால் -- தென் சென்னையிலுள்ள தங்களது உறவினரும், மற்றவர்களும் நவ. 7-ந் தேதியன்று வாக்குச் சாவடிகளுக்குத் திரண்டுசென்று வாக்களிக்குமாறு செய்யவேண்டியது கடமையாகும்"

என்று பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், சென்னை—நம்மாழ்வார்பேட்டையில் தி.மு.க. சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் கேட்டுக்கொண்டார். அவர் மேலும் கூறியதாவது :—

" படி அரிசித் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றி மேலும் பல ஊர்களுக்கு விரிவுபடுத்தவும் கழக ஆட்சி பாடுபட்டு வருகிறது; இந்த முயற்சியையும் காமராசர் அறியாதது அல்ல! அறிந்தும், படி அரிசித் திட்டத்துக்கு உலைவைக்க அவர் முயன்றுவருகிறார்!

நாமெல்லாம் அரிசிக்கு உலை வைப்போம்! அவர் படி அரிசித் திட்டத்துக்கே உலைவைக்கிறார்! 'அரசாங்கம் கொள்முதல் செய்கிற நெல்லுக்கு விலை கூட்டித் தரவேண்டும்' என்கிறார்! 'அதற்காகக் கிளர்ச்சி நடத்த வேண்டும்' என்றும் சொல்கிறார்! இவருக்கு, 'ஏழை பங்காளர்' என்று கூடப் பெயர்! 'இவர் சொல்வதை விவசாயிகள் ஏற்றுக் கொண்டுள்ளனரா இல்லையா' என்பது நமக்குத் தெரிந்த ஒன்றுதான்!

உண்மையிலேயே இவர்கள் விவசாயிகளைக் காப்பவர்கள் என்றிருந்தால், விருதுநகர்த் தொகுதியில் இவரும்—திருப்பெரும்புதூர்த் தொகுதியில் பக்தவத்சலமும் வெற்றியல்லவா பெற்றிருக்க வேண்டும்? ஆனால் கிராம மக்கள், தி.மு. கழகத்தின் பக்கமே நின்றார்கள் என்பதை, கடந்த பொதுத்தேர்தல் நிரூபித்துக்காட்டியது!

அந்தக் கிராம மக்களை—விவசாயிகளைப் பார்த்துத்தான் காமராசர் சொல்கிறார் — 'தமிழக அரசு கொள்முதல் விலையைக் கூட்டித் தரத் தடையாக இருக்கிறது' என்று!

இதற்குக் காரணம், 'ஒரு படி அரிசித் திட்டத்தைக் குலைப்பதன் மூலம் மீண்டும் ஆட்சியைப் பிடித்துவிடலாம்' என்ற இவர்களது நினைப்பே ஆகும்.

இந்தப் படி அரிசித் திட்டமென்பது அரிசி விலையைக் குறைக்க மட்டுமல்ல — மற்ற பொருட்களின் விலைகளையும் குறைப்பதற்கே!

காமராசர் சொல்கிறார் என்பதற்காக மக்கள் ஏமாறமாட்டார்கள்! 'காமராசர் மனத்தில் இருப்பது தென் சென்னைத் தேர்தல்' என்பதை மக்கள் அறிவர்!

இங்கே படி அரிசி ஒரு ரூபாய் என்றதும், வெளி மாவட்டங்களில் அரிசியின் விலை குறைந்துள்ளது.

சென்ற ஆண்டு இதே மாதங்களில் திண்டுக்கல்லில் ரூ. 2.70-க்கு விற்ற படி அரிசி இப்போது ரூ. 1.60-க்கு விற்கிறது. இங்கே ரூ. 1 என்பதால், ஆற்காடு, வேலூர், ஆரணி போன்ற ஊர்களில் ரூ. 1.30—ரூ. 1.40-க்கு நல்ல அரிசி கிடைக்கிறது! ஆக, இந்தப் படி அரிசி திட்டத்தின் நன்மை, தமிழ் நாடு முழுவதற்கும் நன்மை ஏற்படச் செய்திருக்கிறது என்பதை, உணராதவர்களும் இனி உணர்ந்துகொள்ள வேண்டும்."

'வியட்நாம்'

எதிர்ப்புப் போராட்டம்

'பெண்டகன்' கொடுத்த விலை!

அமெரிக்காவின் வியட்நாம் கொள்கைக்கு எதிராகச் சென்ற வார இறுதியில், அமெரிக்க இராணுவத் தலைமை நிலையமான 'பெண்டகன்' அலுவலகத்திற்கு எதிரில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைச் சமாளிப்பதற்காக வாஷிங்டன் அரசு, பத்து இலட்சம் டாலர்களைச் செலவழித்திருக்கிறது! (ஒரு டாலர், சுமார் ஏழரை ரூபாய்க்குச் சமம்.)

எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் எண்ணிக்கையைச் சரிக்கட்டுவதற்காக அமெரிக்க அரசு, விமானமூலம் இராணுவத்தை வாஷிங்டனுக்கு அனுப்ப நேர்ந்ததுதான் இந்த அதிகச் செலவுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

'இடைத் தேர்தல்களை விரைவில் நடத்துக'

தலைமைத் தேர்தல் ஆணையாளர் தாக்கீது

புதுடில்லி, அக். 27—

சட்டமன்றத்தில் ஓர் இடம் காலியானால் ஆறு திங்களுக்குள் அந்த இடத்துக்கு மறு தேர்தல் நடத்திவிடத் தேர்தல் குழு முற்பட்டுள்ளது.

கூடியவரை இந்தக் கால வரம்பைக் கடைபிடிக்குமாறு தலைமைத் தேர்தல் ஆணையாளர் கிளைகளுக்கு தாக்கீது அனுப்பியுள்ளார்.

தென் சென்னைத் தொகுதி இடைத் தேர்தலையொட்டி, தலைமைத் தேர்தல் ஆணையாளரும், துணை ஆணையாளரும் நவம்பர் 7-ம் நாளுக்கு இரண்டு நாள் முன்னதாகவே சென்னைவந்து முடிவு அறிவிக்கப்பட்ட பின், டில்லி திரும்புவர்.

சென்னையில் வீட்டு வசதி அமைச்சர்கள் மாநாடு

சென்னை, அக். 29—

மாநில வீட்டு வசதி—நகர வளர்ச்சி—மற்றும் நகர திட்டமிடும் துறை அமைச்சர்கள் மாநாடொன்று, சென்னையில் இராஜாஜி மண்டபத்தில் நவம்பர் 8-ம் நாள் முதல் 10-ம் நாள் வரையில் நடைபெறும்.

இந்த மாநாட்டில், அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் ஆகியோர் 45 பேரும், மத்திய அரசையும்—மாநில அரசுகளையும் சேர்ந்த முதுநிலை, இளநிலை அதிகாரிகள் உள்பட 185 பிரதிநிதிகளும் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநிலங்களுக்கு.....

அதிக அதிகாரம் கிட்ட மாறனை அனுப்புவீர்!

" எதற்கெடுத்தாலும், 'டில்லி, டில்லி' என்று காங்கிரசல்லாத அரசுகள் கூறுவதாகக் காங்கிரசுத் தலைவர்கள் கூறுகிறார்கள்! எனக்குக்கூட, அப்படிக் கூறுவதும் கேட்பதும் வருத்தமாகத்தான் இருக்கிறது; ஆனால் என்ன செய்வது? இந்திய அரசியல் சட்டம் அப்படியிருக்கிறது!

" இப்போது மட்டுமல்ல; நாங்கள் பதவியில் இல்லாத காலத்திலேயே கூறினோம்—'இந்திய அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும்; மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தரப்படல் வேண்டும்' என்று!

" பாலைக் காய்ச்சிய பிறகு சிறிது மோரைவிட்டு அது தயிரான பிறகு கடைந்து மோராகும்போது மீண்டும் கடைந்தால் வெண்ணெய் கிடைக்கும்; அந்த வெண்ணெயைக் காய்ச்சினால் நெய் கிடைக்கும்; வெண்ணெய் எடுத்த பிறகு, 'இன்னும் கொஞ்சம் வெண்ணெய் வேண்டும்' என்று கேட்டால், வீட்டிலுள்ள தாய்மார்கள், 'பால் கொண்டு வா' என்றுதான் கூறுவார்கள்!

" அதுபோல் தமிழக அரசு, தன்னிடமுள்ள கொஞ்சம் மோரில் ஏதோ தன்னால் இயன்ற அளவுக்கு வெண்ணெய் எடுக்கிறது! இந்த நேரத்தில் நீங்கள், 'குடிசைகளாக இருப்பவை ஓட்டுக் குடில்கள் ஆவது எப்போது? ஒட்டிய வயிறு நிறைவது எப்போது? கூனிக் குறுகிய முதுகு நிமிர்வது எப்போது? கண்களில் ஒளி ஏற்படுவது எப்போது? இல்லங்களில் மகிழ்ச்சி ஏற்படுவது எப்போது?' என்று கேட்கிறீர்கள்; அதற்கு நான் மேலும் கொஞ்சம் பால் கேட்கிறேன்; அந்தப் பால் எங்கே கிடைக்கிறது—டில்லியிலுள்ள எருமையிடம்—'எரு[illegible]' என்று கூறுவதால் யாரும் கோபித்துக் கொள்ளக் க[illegible]து; பால் அதிகம் கறக்கிற தன்மையைக் கூறுகிறேன். அவ்விதம் அந்த டில்லி எருமை, எங்களுக்குரிய பால் தராவிட்டால், 'எங்களுக்கென்று ஒரு பசுவைத் தந்துவிடட்டும்; மாநிலங்களுக்குரிய அதிக அதிகாரங்கள், நிதி வசதிகளை ஏற்படுத்தித் தரட்டும்; நாங்கள், எங்கள் மக்களுக்குரிய நன்மைகளை நாங்களே செய்துகொள்கிறோம்' என்ற உரிமை முழக்கத்தைப் புரிய, முரசொலி மாறன்தான் நாடாளுமன்றம் செல்ல வேண்டும்!"

---அறிஞர் அண்ணா

(தியாகராயநகர் கூட்டத்தில்)

பதவி தங்களுக்கே 'சதம்' என்றிருந்தனர்!

பறிபோய்விட்டதால் பதறுகின்றனர்-- கதறுகின்றனர் காங்கிரசார்!

"காங்கிரசுத் தலைவர் காமராசர், 'ஒரு வாரத்தில் மூன்று நாட்களுக்குதான் அரிசி போடுகிறார்கள்' என்று கூறியிருக்கிறார்! அவர் என்னவோ அரிசிக் கடைக்குச் சென்று கால் கடுக்க நின்று திரும்பியவர்போல் கூறியிருக்கிறார்! இப்போதெல்லாம் காமராசர், என்ன பேசுவதென்று தெரியாமல், எதையெதையோ பேசி வருகிறார்"

"படி அரிசித் திட்டம் எப்படி இந்த அளவில் சீராக நடைபெற்று வருகிறது?—கொள்முதல் செய்வதில் கழக அரசு காட்டிய முறையான அக்கறைதான்! கேரளம் போன்ற வெளிமாநிலங்களுக்குக் கள்ளத்தனமாக அரிசி போவதைத் தடுத்து நிறுத்தி செயல்பட்டதால்தான்! இதைப் பார்த்து ஆத்திரப்படுவதில் என்ன அர்த்தம்!

" வெள்ளைக்காரன்கூட, 'நம் ஆட்சி மாறும்' என்று எண்ணினான், ஆனால் காமராசரும், பக்தவத்சலமும், தங்களைத் தவிர வேறு யாரும் ஆளமுடியாது' என்று தீர்மானித்திருந்தார்கள்!

" காங்கிரசு ஆட்சிக்கு வந்தவுடன்—தாங்கள் கூறியதுபோல்—'இந்த நாட்டை வளம்பெருகச் செய்ய ஐந்தாண்டுகள் போதாது' என்றார்கள்! பின், 'பதினைந்து ஆண்டுகளும் போதாது' என்றார்கள்! இருபது ஆண்டு ஆகியும், 'திட்டங்கள் நிறைவேற இன்னும் காலம் வேண்டும்' என்றார்கள்!

" நாங்கள் அப்படி உங்களை ஏமாற்றிச் செல்ல வரவில்லை! இருபது ஆண்டுக்காலம் இந்த நாட்டை சீராக்குவதற்குப் பதில் சீரழித்துச் சென்றுள்ள நிலைமைகளைச் சரிசெய்யவே கொஞ்ச காலம்—அவகாசம் கேட்கிறோம்; அதன் பின், வாக்குறுதிகள் நிறைவேறி வருகிறதா இல்லையா என்பதைப் பாருங்கள்!

" அறிஞர் அண்ணா அவர்கள் இன்றையத்தினம், தமிழகத்தையே கனித் தோட்டமாக்கும் அளவுக்கு அவர்தம் ஆற்றல்—பணி இருந்துவருவதை, இந்த நாடே பார்த்து வருகின்றது! காங்கிரசுக்காரர்கள் இதைக் கண்டு பொறுமைப்படுகிறார்கள்! குழப்பமாகப் பேசுவதும், நாகரிகமின்றி எழுதுவதுமாகச் செயல்பட ஆரம்பித்து விட்டார்கள்!

" கழகத்தின் பணியினால்—அண்ணாவின் தொண்டால் அமையும் கனித் தோட்டத்தின் பலன்களை நாம் சுவைக்க—உருவாகும் அனுபவங்களைத் தடுத்திட காங்கிரசார் சதித்திட்டமிடுகிறார்கள்! இதையெல்லாம் நீங்கள் புரிந்து, தமிழ் வாழ—தமிழ் ஆள—முரசொலி மாறனுக்குப் பெருவாரியாக வாக்களித்து வெற்றி பெறச் செய்திட வேண்டுகின்றேன்."

--பேராசிரியர் க. அன்பழகன்

(புரசைவாக்கம் கூட்டத்தில்)

சூயஸ் கால்வாய் அடைப்பின் விளைவு!

இலண்டன், அக். 28—

"சூயஸ் கால்வாய் அடைக்கப்பட்டுவிட்டதால், உலகெங்கிலுமுள்ள கப்பல் கட்டும் துறைகளுக்கு மிகப் பெரிய கப்பல்களைக் கட்டும் ஆர்டர்கள் குவிந்து வருகின்றன" என்பது லாயிடு நிறுவனத்தின் பதிவேடுகளிலிருந்து தெரிகிறது.

பெரிய சாதனையாக மொத்தம் 3,95,50,636 டன் நிறையுள்ள கப்பல்களுக்கு ஆர்டர் கிடை[illegible]துள்ளது; இத்துடன் நடப்பு ஆண்டின் மூன்றுவது மூன்று மாத காலத்து ஆர்டரான 42,03,383 டன் நிறையும் சேர்ந்துகொண்டது.

இந்த ஆர்டர்களைப் பெற்றதில் ஜப்பான் முதலிடத்தில் நிற்கிறது; அதற்கு 1,69,00,000 டன் நிறையுள்ள கப்பல்களைக்கட்டும் ஆர்டர் கிடைத்திருக்கிறது.

அடுத்தபடியாக சுவீடனுக்கு 34,00,000 நிறையுள்ள கப்பல்களைக் கட்டும் ஆர்டர் கிடைத்திருக்கிறது.

உலகில் மொத்தம் 1,33,90,000 டன் நிறையுள்ள 1,882 கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன.

"சூயஸ் கால்வாய் அடைக்கப்படாதிருந்தால், ஆர்டர்கள் இவ்வாறு அதிகரித்திரா" என்று லாயிடு நிறுவனத்தின் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகப் புலவர் குழு

எம். ஆர். பெருமாள் நியமனம்

தமிழகப் புலவர் குழுவில் உறுப்பினராக இருந்த டாக்டர் மா. இராசமாணிக்கனார் காலமானதையொட்டி ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு. எம். ஆர். பெருமாள் முதலியார் (தமிழக அரசு தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர்) நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய காட்சிகள்!

சனவரித் திங்களில் தலைநகர் பூணப் போகும் விழாக்கோலம்!

உலகத் தமிழ் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் விவரம்

சென்னை, அக். 28—

சனவரித் திங்களில் சென்னையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி நகரில், கண்ணகிக்குச் சிலை அமைக்கத் தமிழகமெங்கணும் உள்ள உயர்நிலைப் பள்ளி—கல்லூரி மாணவர்களிடம் நன்கொடை வசூலிக்கப்படும்.

இதற்கான நன்கொடைச் சீட்டுகள் அச்சடிக்கப்பட்டு, எல்லா உயர்நிலைப் பள்ளி மாணவ—மாணவியர், கல்லூரி, மாணவ—மாணவியருக்கும் அனுப்பப்படும்.

உயர்நிலைப் பள்ளிகளில் தலைக்கு 50 காசும், கல்லூரிகளில் தலைக்கு ரூ. 1-ம் வசூலிக்கப்படும்.

ஊர்வலம்

மாநாட்டையொட்டி, ஜெமினி சதுக்கத்திலருந்து ஐலண்டு மைதானம் வரையில், தமிழகப் பண்பாட்டு ஊர்வலம் நடக்கும்; 20 அலங்கார வளைவுகள் அமைக்கப்படும்; 40 அலங்கார வண்டிகள் பங்கு கொள்ளும்.

சாலைகளின் இருமருங்கிலும், பொதுமக்கள் அமர்ந்து பார்ப்பதற்காக, இருக்கை வசதி (காலரி) அமைக்கப்படும்.

கவிதைப் போட்டி

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, 'புகாரில் ஒரு நாள்' என்ற கவிதைப் போட்டி நடத்தப்பட்டது; இதுவரையில் 1956 இளங் கவிஞர்கள் பங்கு கொண்டு கட்டுரை எழுதியுள்ளனர். இவைகளை ஆய்வு செய்து, பரிசுக்குரிய கவிதைகள் தேர்ந்தெடுக்கப்படும்.

வெளிநாடுகளிலிருந்து....

மாநாட்டில் வெளிநாடுகளிலிருந்து 250 பிரதிநிதிகள் வருவர் என இப்போது தகவல் கிடைத்திருக்கிறது.

ஆசிரியர்--மாணவர்கட்கு விடுமுறை வசதி

ஏற்கனவே அறிவித்தபடி, கருத்தரங்கு மாநாடு 1968 சனவரி 3-ம் நாள் முதல் 10-ம் நாள் வரை நடைபெறும்.

11-ம் நாள் முதல் 16-ம் நாள் வரை மாநாட்டுக்கு வருகின்ற பிரதிநிதிகள், தமிழ் நாட்டின் முக்கிய இடங்களுக்குச் சுற்றுலாச் செல்வார்கள்.

மாநாட்டு வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் வேண்டியதற்கிணங்க—அவர்கள் சென்னை மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கண்டும் கேட்டும் பயனடைகின்ற வகையில்—தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கல்வி நிலையங்களுக்கும் சனவரி 3-ம் நாள் முதல் 16-ம் நாள் வரை விடுமுறை அளிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

நிதி வசூல்

மாநாட்டுச் செலவுக்கு நிதி திரட்டுவதற்காக — கோவை, சேலம், வேலூர், திருநெல்வேலி, திருச்சி, மதுரை, தஞ்சை ஆகிய இடங்களில் நாடகங்களும், நடனங்களும் நடைபெறும். அந்த நிகழ்ச்சிகள் நடைபெறும் நாள்—இடம்—நிகழ்ச்சிகள் கீழே தரப்பட்டுள்ளன :—

நவ. 19 : வேலூர்—செல்வி சந்திரகாந்தாவின் பொன்னியின் செல்வி' நாட்டிய நாடகம்.

நவ. 26 : திருநெல்வேலி—செல்வி சந்திரகாந்தாவின் 'பொன்னியின் செல்வி' நாட்டிய நாடகம்.

நவ. 28 : தஞ்சை—டி.கே.எஸ். சகோதரர்களின் 'ஒளவையார்' நாடகம்.

நவ. 30 : மதுரை—டி.கே.எஸ். சகோதரர்கள் 'ஒளவையார்' நாடகம்.

டிச. 3 : கோவை — சிவாஜி கணேசனின் 'வியட்நாம் வீடு' நாடகம்.

டிச. 5 [illegible]லம்—செல்வி ஜெயலலிதா[illegible] 'காவிரி தந்த கலைச் செல்வி' நாட்டிய நாடகம்.

டிச. 6 : திருச்சி—செல்வி ஜெயலலிதாவின் 'காவிரி தந்த கலைச் செல்வி' நாட்டிய நாடகம்.

திருச்சி, சேலம், வேலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தலைமைதாங்குவார்.

சினிமா, நாடகம் ஆகிய துறைகளில் உள்ள பெருமக்கள், மாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்குத் தங்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்க இசைந்துள்ளனர்.

சினிமாப் படத் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் முதலியவர்களை 18-10-67 அன்று முதலமைச்சர், கல்வி அமைச்சர், உள்ளாட்சி அமைச்சர் முதலியோர் சந்தித்து மாநாட்டு வேலைகள் சிறப்பாக நடைபெறுவதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்தார்கள்; அதன் விளைவாக திரு. எஸ். எஸ். வாசனைத் தலைமையாகக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

அதுபோலவே நடிகர் சங்க உறுப்பினர்களையும் அமைச்சர்கள் சந்தித்து உரையாடினர்கள்.

மாநாட்டைத் தொடங்கிவைக்க இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் இசைந்துள்ளார்.

உருவச் சிலைகள் நிறுவுதல்

மாநாட்டையொட்டி பாரதியார், பாரதிதாசன் ஆகியோருடைய சிலைகளைச் சென்னை மாநகராட்சி மன்றமும், திருவள்ளுவருடைய சிலையைத் திரு. சிவாஜி கணேசனும், கண்ணகி சிலையைத் தமிழ்நாட்டு மாணவர்களும் அறிஞர் அண்ணா சிலையை புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனும் நிறுவுவதற்கு முன்வந்துள்ளனர்.

செயற் குழுவில் ஏற்கனவே இருக்கின்ற துணைத் தலைவர்களோடு முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதமும் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்; அவரும், மாநாட்டு அமைப்புச் செயலாளர் அவர்களும் மு. ரா. பெருமாள் அவர்களும் ஒன்றுக இணைந்து, கீழ்க்காணும் வேலைகளைக் கவனித்துக் கொள்வார்கள் :—

ஊர்வலம்

பொருட்காட்சி

பொதுக்கூட்டங்கள்

சிலை எடுத்தல்

மாநாட்டு மலர்

நாடகங்கள், நாட்டியங்கள்.

மேற்கூறியவர்களுக்கு உதவியாக மாநாட்டுத் தனி அலுவலர் திரு. ம. வெங்கடசுப்பிரமணியம் மேற்கூறிய வேலைகளைக் கவனித்துக் கொள்வார்.

துணைத் தலைவர், அமைப்புச் செயலாளர், தனி அலுவலர் ஆகிய இம்மூவருடைய அலுவலகங்களும் தமிழக அரசுத் தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ளது''

எழிலார்ந்த கைத்தறியாடை வாங்கியுடுத்துவீர்!

ஏழை நெசவாளர் துயர் துடைக்க உதவுவீர்!

"கைத்தறியாடை அணிபவர்கள் தங்கள் உள்ளத்தை நிறைவாக்கிக் கொள்வதுடன், எண்ணற்ற ஏழை நெசவாளர்களின் வாழ்விலும் ஒளியேற்றுபவர்களாகவும் விளங்குகிறார்கள்! அவர்களையும் அறியாமல் செய்யும் அவர்களின் இந்த உதவி, நம் நாட்டின் மக்கள் தொகையில் ஒரு கணிசமான பகுதியையே வாழ வைக்கிறது!

கைத்தறி ஆடைகளின் நேர்த்தியை—எழிலை—அழுத்தமான நெசவைக் கண்டு மகிழும் உள்ளம், அவற்றை கூட்டுறவு கைத்தறி விற்பனை நிலையங்களிலும், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்களிலும் வாங்கும்போது, அதன் விலை மலிவையும் கண்டு வியக்கிறது!

"சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், கைத்தறி ஆடையை வாங்கி அணிவதால், 'ஏழை நெசவாளர்களுக்கு வாழ்வளிக்கிறோம்' என்ற அந்த திருப்தியோடு, 'நீடித்து உழைக்கக்கூடிய—விலை மலிவான—எழில் வண்ண 'மோஸ்தர்'களில் நெய்யப்பட்ட—தரமான துணியையே வாங்கி அணிகிறோம்' என்ற மனத்திருப்தியையும் நாம் பெறமுடியும்! 'ஆலைகளாலும் உற்பத்திச் செய்ய முடியாத அழகான வண்ணவகைகள் கைத்தறியில்தான் உண்டு' என்ற உண்மையை, அண்மைக் காலமாகப் பொதுமக்கள் உணரத் தலைப்பட்டிருப்பது, நெசவாளர்களின் நல்வாய்ப்பாகும்!

"உழவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக நின்று, இன்று 150 இலட்சம் மக்களுக்கு நேரிடையாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பினைத் தந்து வாழ்வளித்து வருவது கைத்தறித் தொழில்தான்! தமிழ்நாட்டில் மட்டும் இத்தொழிலை நம்பி சுமார் 30 இலட்சம் நெசவாளர்கள் வாழ்கிறார்கள்! இங்கே உள்ள ஒவ்வொரு பதினேராவது மனிதனும், நெசவுத் தொழிலை நம்பி வாழ்கின்றவன் தான்! இப்படிப்பட்ட இத்தொழில் சீரழிந்தால், நாட்டில் எத்தகைய பயங்கரமான விளைவுகள் ஏற்படும் என்பதை உணர்ந்துதான் மத்திய—மாநில அரசுகள், இத்தொழிலுக்கு எவ்வளவோ உதவிகளைச் செய்துவருகின்றன!

"அரசாங்கம் எவ்வளவு உதவிகள் செய்தாலும் பொதுமக்களின் ஆதரவு இல்லாவிடின் இத்தொழில் முன்னேற முடியாது! எனவேதான், நாட்டின் நலனையும், பொருளாதார மேம்பாட்டையும், நெசவாளர்களின் நல்வாழ்வையும் கருத்தில் கொண்டு, கைத்தறியாடைகளைப் பெரும் அளவில் வாங்க வேண்டுமென்று பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

"வழக்கமான ரூபாய்க்கு ஐந்து காசு தள்ளுபடியோடு, தீபாவளிப் பண்டிகைக்கான சிறப்புத் தள்ளுபடியான ரூபாய்க்கு ஐந்து காசும் சேர்த்து மொத்தம் ரூபாய்க்கு 10 காசு தள்ளுபடி 18—10—67 முதல் 1—11—67 வரை 15 நாட்களுக்குத் தரப்படுகிறது. இந்தச் சிறப்புத் தள்ளுபடிச் சலுகை பருத்திக் கைத்தறி ஆடைகளுடன்—பட்டு, செயற்கைப் பட்டு, பருத்தியும் செயற்கைப் பட்டும் கலந்த கலப்பு ரக ஆடைகள் உட்பட எல்லா ரகக் கைத்தறியாடைகளுக்கும் கிடைக்கும்.

"முன்பெல்லாம் தீபாவளி சமயத்தில் எட்டு நாட்களுக்கு மட்டுமே சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கப்படுவது வழக்கமாகும்; ஆனால் இவ்வாண்டு 15 நாட்களுக்கு அந்தச் சலுகையைத் தரத் தமிழக அரசு முன்வந்திருப்பதற்காக நெசவாளர்களும், பொதுமக்களும், அரசுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

"அரசாங்கத்தால் வழங்கப்படும் இந்தத் தள்ளுபடி, எல்லா மாநிலங்களிலும் உள்ள எல்லா 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையங்களிலும், தமிழகத்திலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் கிடைக்கும். மொத்த விற்பனை, சில்லறை விற்பனை ஆகிய இரண்டு வகை விற்பனைக்கும் இத்தள்ளுபடி சலுகை உண்டு.

"இந்த அரிய வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக்கொண்டு, காலத்திற்கேற்ற கண்கவர் 'மாதிரி'களில் கெட்டிச் சாயம் கொண்ட—நீடித்து உழைக்கக்கூடிய—விலை மலிவான கைத்தறி ஆடைகளை ஏராளமாக வாங்கி, நெசவாளப் பெருங்குடி மக்களை ஆதரிக்க வேண்டுமெனப் பொதுமக்களை மீண்டும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்."

---எம். பி. நாச்சிமுத்து

(தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்)

அமைச்சரவை நெருக்கடியால் ஏற்பட்ட விசித்திரம்!

லக்னோ, அக். 28—

நிலவரி நீக்கப் பிரச்னை சம்பந்தமாக உத்தரப் பிரதேச அமைச்சரவையிலிருந்து 7 பேர் இராஜிநாமா செய்த காரணத்தால், உ. பி. மாநில தலைமைச் செயலகத்தில், விசித்திர நிலைமை ஏற்பட்டுள்ளது!

இராஜிநாமா தாக்கல் செய்த அமைச்சர்கள் அலுவலகத்துக்கு வராத காரணத்தால், அவர்களுடைய கையெழுத்துத் தேவைப்படும் அலுவல் காகிதங்கள் குவிந்துவிட்டன!

நிதித் துறைத்தான் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது பல துறை மானியங்கள் அளிக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன! மத்திய அரசாங்கத்துக்குச் செல்ல வேண்டிய முக்கிய கடிதங்கள் தலைமைச் செயலகத்தை விட்டு நகரவில்லை!

"அமைச்சர்கள் இராஜிநாமாக்கள் ஏற்கப்படாவரையில், அவர்கள், அலுவலகத்துக்கு வந்து வேலை செய்யவேண்டியவர்கள்" என்று, சட்ட நிலையை மாநில சட்டத்துறை அதிகாரி ஒருவர் விளக்கினர்.

கொங்கணி மொழியினர் எழுப்பும் குரல்!

'கொங்கணி பாஷா மண்டல்' கூட்டிய அனைத்திந்திய கொங்கணி மொழி மாநாடு, 'கொங்கணியையும் அரசியல் மொழிச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் சேர்க்க வேண்டும்' என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தனிக் கொங்கணி மாநிலத்தைத் தோற்றுவிக்கப் போராடுவதற்காக, மராட்டிரம் — கோவா—கருநாடகம்—கேரளம் ஆகிய மாநிலங்களில் சிதறிக்கிடக்கும் 30 இலட்சம் கொங்கணி பேசும் மக்களுக்கு அது அறைகூவல் விடுத்துள்ளது.

கருநாடகம்—கோவா — கேரள மாநிலங்களிலுள்ள துவக்கப் பள்ளிகளில், கொங்கணி மொழியைக் கற்பிக்க வசதி செய்து தருமாறு, அது, இந்த மாநில அரசுகளை வேண்டிக்கொண்டுள்ளது.

எல்லா மொழிகட்கும் சமவுரிமை!

பு. சோ. கட்சி கோரிக்கை

புரட்சி சோஷலிஸ்டுக் கட்சியின் கேரள மாநில மாநாடு, "இந்தி மொழிக்குத் தரப்பட்டிருக்கும் தேசிய மொழி அந்தஸ்து, எல்லா மொழிகளுக்கும் தரப்பட வேண்டும்" என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

'அரசியல் சட்டம் உட்பட அனைத்துச் சட்டங்களையும் அழிப்போம்'

'மாநில அரசுகள் கடமையாற்ற அது ஒன்றே வழிவகுக்கும்'

லெனினை மேற்கோள் காட்டுகிறார் கேரள அமைச்சர்

"இப்போது இருக்கின்ற சட்டங்கள்—அரசியல் சட்டம் உட்பட—அனைத்தும் அழித்தொழிக்கப்படல் வேண்டும்; மாநில அரசுகள் ஏதாவது நன்மைகள் செய்வதற்கு இது ஒன்றே வழிவகுக்கும்"

என்று, கேரள போக்குவரத்து அமைச்சர் இம்பிச்சி பாவா, ஆலப்புழையில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

திருவாங்கூர் சமஸ்தான மன்னரை எதிர்த்துக் கம்யூனிஸ்டுக் கட்சி 21 ஆண்டுகளுக்கு முன்பு நடத்திய போராட்டம் ஒன்றின் நினைவு விழா வைபவத்தில் பேசிய அவர், மேலும் தெரிவித்ததாவது:-

'இரஷ்யாவில் ஆட்சியைக் கைப்பற்றியதும் லெனின் செய்த முதல் காரியம்—அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் அங்கே நடந்த முதல் சீர்திருத்தம்—அது வரையில் இருந்த சட்டங்களை அப்புறப் படுத்தியதுதான்!"

‘ஆர்ப்பாட்ட முறைகளைக் கைவிட்டு ஆக்கப் பணிகளில் ஈடுபட வேண்டும்’

‘சனநாயகத்திற்குச் சோதனை ஏற்பட்டிருக்கிற நேரமிது - மாணவர்கள் பொறுப்பு மகத்தானது’

மாணவர் மாநாட்டில் அமைச்சர் கே. ஏ. மதியழகன் தெளிவுரை

சென்னை, அக். 29—

“சனநாயகத்திற்குச் சோதனை ஏற்பட்டிருக்கிற இந்தக் கட்டத்தில், தமிழக மாணவர்களின் பொறுப்பு மகத்தானது; இன்றையத்தினம் உலகமே நம்மை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது; நமது சாதனைகள் உலகத்தால் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகின்றன; உலகத்தின் பல பகுதிகளிலுமிருந்தும் வருகிற வெளிநாட்டவர்கள், நமது சாதனைகளைக் கேட்டறிய ஆவல் உள்ளவர்களாக இருக்கின்றனர்; இந்த நேரத்தில் மாணவர்கள், ஆர்ப்பாட்ட முறைகளைக் கைவிட்டு ஆக்கப்பணியில் இறங்கவேண்டும். உணவு உற்பத்தி போன்ற காரியங்களில் படித்தவர்கள் ஈடுபாடு கொள்ளவேண்டும். இந்தியை எதிர்க்கும் பொறுப்பை அண்ணா அவர்களின் அமைச்சரவையிடம் விட்டுவிடவேண்டும்”

என்று, சென்னையில் நடைபெற்ற மாணவர் சனநாயகப் பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றுகையில், உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் கேட்டுக்கொண்டார். அவர் மேலும் கூறியதாவது:—

“இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்புகின்ற வரையில், ஆங்கிலம் நீடிக்குமென பண்டிதநேரு கொடுத்த உறுதி மொழிக்கு உட்பொருள் ஒன்று உண்டு; இனி, ‘ஆங்கிலம் தேவையில்லை’ என முடிவு செய்கிற உரிமை இந்திரா காந்திக்கோ மொரார்ஜிக்கோ, சேத் கோவிந்த தாசுக்கோ இல்லை; அந்த முடிவை மேற்கொள்ள வேண்டியவர்கள், காவிரி—கோதாவரி தீரத்து மக்கள், கன்னடர்கள், மற்றுமுள்ள இந்தி பேசாத பகுதிகளின் மக்கள்தான்; இந்த உண்மையைத்தான் பண்டித நேரு, சமது உறுதிமொழியில் சூசகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

“தமிழ்நாட்டில் கடைசித் தமிழனின் கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும் வரையில் இந்தியை ஏற்க மாட்டோம்’ எனத் திட்டவட்டமாக நாம் டில்லிக்குத் தெரிவித்துவிட்டோம்; அண்ணா அவர்களின் தலைமையில் ஆட்சி அமைந்திருக்கிறதென்றால், அது ‘இந்தி எதிர்ப்பு ஆட்சி’ என்றுதான் பொருள்!

“மாணவர்களின் க்டமை பெரிது; நூற்றுக்கு மேற்பட்ட நாடுகள் கலந்துகொள்ளும் அனைத்து நாடுகளின் உணவு மாநாட்டில் இந்தியத் தூதுக்குழுவின் மாற்றுப் பிரதிநிதியாக நான் கலந்துகொள்கிறேன்; இதுபோன்ற பல பெருமைகள்—பொறுப்புகள் எதிர்கால மாணவர்களை நோக்கி வர இருக்கின்றன. மாணவர்கள் இப்போதிருந்தே தங்களைத் தயார்படுத்திக்கொள்ளும் பணியில் ஈடுபடவேண்டும்.”

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ருந்தவர்கள், நான்கு பேர்கள் மட்டுமே!

காங்கிரசு செயற்குழுக் கூட்டத்தில், ஒவ்வொரு மாநிலத்தின் அரசியல் நிலைமைகள் பற்றியும் அறிக்கைகள் படிக்கப்பட்டன!

அறிக்கையே படிக்கப்படாத வெகு சில மாநிலங்களில், காங்கிரசுத் தலைவர் காமராசரின் தமிழகமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது!

மற்ற மாநிலத்துக் காங்கிரசுக்காரர்கள், தமிழகக் காங்கிரசின் இந்த ‘அவல நிலை’யைக் கவனிக்கத் தவறவில்லை!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-[illegible]) [illegible]

சென்னையில் தடையுத்தரவு

சென்னை, அக். 29—

“தென் சென்னை இடைத் தேர்தலையொட்டி நெருக்கடி நிலை நிலவுவதால், நகரப் போலீசு சட்ட விதிப்படி நகரில் ஊர்வலமோ, கூட்டமோ முன் அனுமதியின்றி நடத்தக் கூடாது”

என்று நகரப் போலீசுக் கமிஷனர், தடை ஆணை பிறப்பித்துள்ளார்.

இந்த ஆணை, நவ. 10-ம் நாள் வரை நடைமுறையில் இருக்கும்.

நடக்க இருப்பவை

31--10--67

அருப்புக்கோட்டை

சிவசண்முகசுந்தரனார் படிப்பகச் சார்பில் இரவு 7-மணிக்கு 16-வது வட்டம் திருநகரில்; தலைவர்: மு. க. இராமலிங்கம்; பேசுவோர்: கவிஞர் எம். எஸ். இராமசாமி, கா. காளிமுத்து பி.ஏ., ப. பெ. ந. நல்லதம்பி, கு. பஞ்சவர்ணம், வெ. பெரியசாமி.

தென் சென்னை சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்கட்கு:

“தென் சென்னையில் உள்ள சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்கள் அனைவரும், தி மு.க. வேட்பாளர் முரசொலி மாறன் அவர்களை ஆதரித்து வாக்களிப்பதுடன், அவரது வெற்றிக்குப் பாடுபட வேண்டும்”

என்று, சென்னை சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர் சங்கத்தின் சார்பில் அதன் துணைத் தலைவர் பி. ஏகாம்பரமும், ந. பாளையமும் கேட்டுக்கொள்கின்றனர்.

குன்னத்தூர் க. அன்பரசு

சுற்றுப்பயணம்

நவ. 1: வால்பாறை, சோலையார் டேம்; 2, 3: சென்னை; 4: வேலாயுதம்பாளையம்; 5: கரூர்; 6: உடுமலை நகரம்; 10: நரசிம்மநாயக்கன்பாளையம்; 11: கொளப்பலூர்; 12: உடுமலை வட்டம்; 13: கணியூர்; 14: கொளாநல்லி.

இந்தியை இங்கே நுழையவிடோம்!

சென்னை, அக். 30—

“இந்த மாநாடு, ‘சனநாயகப் பாதுகாப்பு மாணவர் மாநாடு’ என்று அறிவிக்கப்பட்டிருப்பது, சிலருக்கு வியப்பாக இருக்கலாம்; ‘சனநாயகத்துக்கு ஆபத்து எங்கே வந்துவிட்டது’ என்று அவர்கள் கேட்கலாம்!

“சில ஆபத்துக்கள் கண்ணுக்குத் தெரியாமலே வரும்! எடுத்துக்காட்டாக, நெற்பயிருக்கு வரும் ஆபத்துக்கள் சில, நம் கண்ணுக்குத் தெரியாது! கண்ணுக்குத் தெரியாத பூச்சிகளால் இந்த ஆபத்து வரும்!

“நெற்பயிருக்கு வந்த ஆபத்துக்குக் காரணம் பூச்சிதான் என்பதை அனுபவம் வாய்ந்த—திறமை மிக்க விவசாய அமைச்சர் கோவிந்தசாமியைப் போன்றவர்களால்தான் கண்டுபிடிக்க முடியுமே தவிர, மற்றவர்களால் அதைக் காண முடியாது!

“பூச்சியினால் பயிர்களுக்கு ஏற்படும் ஆபத்தைத் தடுக்க பூச்சிக்கொல்லி மருந்தைத் தெளிப்பதைப்போல், ‘சனநாயகம்’ என்ற பயிருக்குக் காங்கிரசு என்ற பூச்சியினால் ஏற்படும் ஆபத்தைத் தடுக்க, பூச்சிகொல்லி மருந்து போன்ற இந்த மாநாட்டைக் கூட்டியிருக்கிறோம்!

“இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழக அரசில் உள்ள ஒன்பது அமைச்சர்களின் கால்களும் ஒடிந்த பின்னர்தான், இங்கே இந்தி வர முடியும்! அதுவரையில் நாங்கள், இந்தியைத் தமிழகத்தில் நுழையவிட மாட்டோம்!

“நாங்கள் எல்லோரும் இந்தி எதிர்ப்புப் போரில் பிணமான பிறகுதான், மாணவர்களாகிய நீங்கள், போர்க்கொடி உயர்த்த வேண்டும்!

“தமிழக அரசு, தமிழ் மொழி காக்கும் அரசு! எனவே, மொழிப் பிரச்சினையில் நாங்கள் விட்டுக்கொடுக்கமாட்டோம்!”

—அமைச்சர் மு. கருணாநிதி

(மாணவர்கள் மாநாட்டில்)

உலக உணவு மாநாட்டுக்குச் செல்லும்

உணவு அமைச்சர் கே.ஏ. மதியழகன்

அவர்களுக்கு

வழியனுப்புக் கூட்டம்

பட்டாளம் பாரக்ஸ் கேட் ரோடு மணிக்கூண்டு அருகில்

1--11--67 புதன் மாலை 7 மணிக்கு

தலைவர்: சு. பாலன் எம்.சி.

பேசுவோர்:

என்.வி.நடராசன் எம்.எல்.சி.
அமைச்சர்கள்
ஏ. கோவிந்தசாமி
சத்தியவாணிமுத்து
செ. மாதவன்
சாதிக் பாட்சா

முத்துசாமி
மற்றும்
கி. மனோகரன் எம்.பி.
மேயர் இரா. சம்பந்தம்
நீலநாராயணன்
மற்றும் பலர்

—கூட்ட அமைப்பு: 36-வது வட்ட தி.மு.க.

தி. மு. கழக இடைத் தேர்தல்கள்-- நகராட்சித் தேர்தல் நிதி

கழகத் தேர்தல் நிதியாகத் தலைமைக் கழகத்திற்குக் கிடைத்துள்ள தொகை விவரம் வருமாறு:—

		ரூ. காசு
சென்னைப் பொதுக் குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட தற்கேற்பத் திருச்சி மாவட்டக் கழகத்தின் சார்பில்—மாவட்டச் செயல[illegible] திரு. அன்பில் தருமலிங்கம் அவர்கள் கழகப் பொ[illegible]ளாளரிடம் சேர்ப்பித்த தொகை		8,550.00
சென்னை—காசிமேடு தோழர் இராசு அவர்களின் புதுமனை புகுவிழா நிகழ்ச்சியில் 13–9–67 அன்று பொருளாளர் மு. கருணாநிதி அவர்களிடம் தரப்பட்டது		51.00
சென்னை 47-வது வட்டம் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சியில் திரு.வி.க. தெரு தோழர் நடராசன் அவர்களால் தோழர் மைனர் மோசஸ் அவர்களிடம் அளிக்கப்பட்ட தொகை		51.00
கழக இசை நிகழ்ச்சியாளர் திருவாரூர் முருகு பாண்டியன் நெய்வேலி நிகழ்ச்சியின்போது உண்டியல் மூலம் வசூலித்தது		50.00
அறந்தாங்கி பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் இராசன் என்கிற சிவசுப்பிரமணியம் அளித்தது		500.00
திருச்சி மாவட்டக் கழகச் சார்பில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட தொகை ரூ. 8,550.00 தொடர்ச்சியாக திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் பொருளாளரிடம் சேர்ப்பித்த தொகை		450.00
மன்னார்குடி நகரக் கிளை சார்பில் தஞ்சை மாவட்டச் செயலாளர் மன்னை நாராயணசாமி அளித்த தொகை		1100.00
கோவை மாவட்டச் சார்பாக அறிஞர் அண்ணா அவர்கள் மூலமாக		7000.00
தென்னாற்காடு மாவட்டச் சார்பாக இதுவரை வந்துள்ளது—அடியிற்கண்ட விவரப்படி:—		
திண்டிவனம் ஆ. தங்கவேலு அவர்கள் மூலம்	ரூ. 1000	
செஞ்சி வி. முனுசாமி பி.ஏ.பி.எல். மூலமாக	ரூ. 511	
மேல்மலையனூர் ஆர். ஆர். முனுசாமிமூலமாக	ரூ. 501	
வண்டிப்பாளையம் வி. சுப்பிரமணியம், திருக்கோயிலூர் கீர்த்தி, அரகண்டநல்லூர் செல்வராசு ஆகியோர் சார்பாக	ரூ. 1331	
கள்ளக்குறிச்சி கேசவன் எ.ம்.எல்.ஏ, எஸ். பி. பச்சையப்பன் எம்.எல்.ஏ., வாசுதேவன், இராமகிருஷ்ணன் ஆகியோர் சார்பாக	ரூ. 1250	
சிதம்பரம் திரு. தில்லைவில்லாளன் எம்.ஏ. பி.எல்., பொன். சொக்கலிங்கம், சி. கோவிந்தராசன் எம்.எல்.ஏ. (புனவகிரி) ஆகியோர் சார்பாக	ரூ. 1703	
விருத்தாசலம் செல்வராசு, ராமநாதன் பி.ஏ. பி.எல். ஆகியோர் சார்பாக	ரூ. 1000	
தென்னாற்காடு மாவட்டச் செயலாளர் இரா. சாம்பசிவம் அவர்கள் மூலமாக	ரூ. 1301	
வளவனூர் இராமன் எம்.எல்.ஏ., ஏ. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் மூலமாக	ரூ. 580	
பெண்ணாடம் முத்துசாமி மூலமாக	ரூ. 225	
பாண்டிச்சேரி எஸ். ஆறுமுகம் பி.காம்., சி. பி. திருநாவுக்கரசு பி காம்., பி.எல். ஆகியோர் மூலமாக	ரூ. 600	
		10,002.00
வட ஆற்காடு மாவட்டச் சார்பாக மாவட்டச் செயலாளர் இரா. தர்மலிங்கம் அவர்கள் இதுவரை அளித்தது		9101.00
மதுரை மாவட்டம் முதல் தவணையாக மாவட்டச் செயலாளர் திரு. எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் மூலம்		8000.00
பலகுரல் மன்னன் சிவகங்கை சேதுராசன் அவர்கள் ஆங்காங்கு தனது நிகழ்ச்சிகளில் வசூலித்த தொகை		180.00
சென்னை 67-வது வட்டம் ஏ. பி. ராதா		5.00
ஆக மொத்தம்		45,040.00

—பொருளாளர் தி.மு.க.